# செப்டம்பர் மாதம் - 2015

# ஆயர்மடல்

என் அன்பிற்குரிய விசுவாச திருகுடும்பங்களுக்கு,

உங்கள் அனைவருக்கும் ஆண்டவரின் திருப்பெயராலே ஜெபித்து வாழ்த்துகிறேன்.

திருச்சபையின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் உங்களின் பூரணமான ஈடுபாட்டிற்கு, ஆவியானவரால் ஊந்தப்பட்டு, உழைக்கின்ற ஒவ்வொறு ஆத்மாவிற்கும் ஆண்டவருக்கு நன்றி சொல்ல, எதிர்கால நம்பிக்கைக்கு உதாரணமாய் இருக்கிறீர்கள் என்று நம்பி விசுவாசிக்கிறேன்.

செப்டம்பர் மாதம் நமது திருச்சபை வாழ்விலும், நம்குடும்பங்களிலும் ஒரு சிறப்பான நன்றி செலுத்தும் மாதமாக நம்மை வழி நடத்து வருகின்றது. மக்கதொனியர் திருச்சபையார் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக நாம் திருமறையில் வாசிக்கிறோம்.IIகொரிந்தியார் 8ம் அதிகாரத்தை ஒவ்வொரு குடும்பமும் எடுத்து வாசிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி படையல் என்பது ( Thanks Giving) நம்மை ஆண்டவருக்கு ஜெபத்துடன் அர்பணித்து, நமது காணிக்கைகளை அளிக்கும் போது தான் அவை ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை மக்கதொனியா திருச்சபைக்கு பவுல் கடிதத்தின் வாயிலாக கூறுவதை கானுகிறோம்.

அன்புக்குரிய இறைமக்களே நான் சபையின் பிரதிநிதிகள் உடன் உங்களை சந்திக்கும்போது உங்களுடைய ஆவிக்குரிய வாழக்கையையும், சமுதாய நலன்களிலும் திருச்சபையிலும் நீங்கள் கொண்டிருக்கின்ற ஊக்கம் திருச்சபையின் வாழ்வு தொடந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை பார்க்கிறேன்.

திருச்சபையின் எதிர்காலம் வேகமான, வளமான, பூரணமான வாழ்விற்கு திருச்சபையின் தலைவர்களும், ஐக்கிய குழுக்களும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று இறைவனை பிராா்த்திக்கின்றேன்....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பராக ஆமென்.

அருட்பணியில் உங்கள் ஆயர்

**Rev.Daniel Chelladurai**

# செப்டம்பர் மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | தலைப்பு | வேதபாடங்கள் | நடத்துபவர் / செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|
| 01.09.2015 செவ்வாய் | காலை 7.00 மணி | திருவிருந்து / வாக்குத்தத்த ஆராதனை | I தெசலோனிக்கேயர் 5:1-18 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 06.09.2015 ஞாயிறு | காலை 8.30 மணி | அறுப்பின் ஸ்தோத்திர பண்டிகை | | ஆயர் |
| 13.09.2015 ஞாயிறு | காலை 8.30 மணி | ஏழ்மை அல்லது வறுமை நீக்க கிறிஸ்தவ செயற் பொறுப்பு | ஆமோஸ் 8:4-7 | ஆயர் |
| 20.09.2015 ஞாயிறு | காலை 8.30 மணி | இயேசு ஒரு ஆசிரியர் | நீதி மொழிகள் 4: 1-19 | ஆயர் |
| 27.09.2015 ஞாயிறு | காலை 8.30 மணி | தென்னிந்திய திருச்சபை நாள் | 1 சாமுவேல் 22:12-23 யோவான் 21:15 -19 | ஆயர் |

# பெண்கள் பகுதி

சரியான விசுவாசம்
சங்கீதம் -1 30:1-8
தீமோத்தேயு - 4 : 7-22
கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று...
தீமோ -4 : 17

குறிப்பிட்ட ஒரு நன்மையைக் குறிப்பிட்ட விதத்தில் பெறுவோம் என்று தேவன் மேல் நம்பிக்கை வைப்பதும் விசுவாசம்தான். ஆயினும் சில நேரங்களில் அவ்விதம் காரியங்கள் நடக்கவில்லை என்பதும் ஒரு மறுக்க முடியாத யதார்த்தமாக உள்ளது. விசுவாசி ஒருவர் ஒருகால கட்டத்தில் தனக்குத் தேவையான ஒரு உதவியைக் குறிப்பிட்ட ஒரு வேளையில் குறிப்பிட்ட ஒரு வடிவத்தில் விசுவாசத்தினால் பெற்றுக்கொண்டார். அதிலிருந்து தேவனிடமிருந்து எதையாவது விசுவாசமத்தின் மூலமாகப் பெற விரும்பினால், அதனைத் தெளிவான முறையில் எதிர்பார்த்துப் பெற்றுக் கொள்வதே அவருடைய விசுவாச முறையாக இருந்து. ஆனால் அதற்குப் பின்னர் சில சூழ்நிலைகளில் அவர் எதிர் பார்த்தபடி எதுவும் நிகழாமல் போனதால் அவர் சோர்வுக்குள்ளானர். ஆம். விசுவாசம் என்ற பெயரில் எல்லா நேரங்களிலும் தேவனுடைய செயல்பாட்டை நாம் விரும்புகின்ற விதமாகக் கோடு கிழித்துக் காண முடியாது. ஆனால்மிக நெருக்கடியான நேரங்களிலும் மிக சோதனையான சூழ்நிலைகளிலும், புரிந்து கொள்ள இயாலாத விதமாக சில எதிர்மாறான காரியங்கள் நிகழ்கின்ற வேளையிலும், கெஞ்சி மன்றாடிக்கேட்ட விதமாக தேவன் செயல்படாத நேரங்களிலும் அவரையே பற்றிக்கொண்டு, அவரையே சாா்ந்து கொள்வதுதான் மிகப்பெரிய விசுவாசமும்,மிகச்சரியான விசுவாசமுமாகும்.

சில நேரங்களில் நாம் எண்ணியபடி நமக்கு ஆதரவாக எதுவும் நிகழாத போது, நம் விசுவாசம் தோல்வியடைந்து விட்டதாக எண்ணிவிடுகின்றோம். ஆனால் அது உண்மையல்ல. அங்கே விசுவாசம் தோல்வியடைவில்லை. நாம் எதிர்பார்த்தவிதம் தான் தோல்வியடைந்துள்ளது. அங்கே பல கேள்விகளுக்கு நடுவிலும், கர்த்தாவே, உம்மையே சாா்ந்துக்கொள்ள விரும்புகிறேன் என்பதே உண்மையான விசுவாசம். பக்தன் ஒருவன் தேவனை நோக்கி என் விசுவாசம் என்னைப் பிடித்திருக்கும் வியாதியை விலக்கவில்லை. ஆயினும் உம்மைவிட்டு நான் நீங்காதிருக்க வேண்டும் என்பதே இப்பொழுது என்னுடைய விசுவாச வாஞ்சை என்று ஜெபித்தாராம்.

அப்போஸ்தலனாகிய பவுல் பலவிதமான உபத்திரவங்களினால் சூழப்பட்டிருந்தான். போகுமிடமெங்கும் பாடுகள் காத்திருந்தன. இறுதியில் புரிந்துகொள்ள இயலாத விதமாக நெடுநாள் சிறைவாசமும் அனுபவிக்க நேரிட்டது. ஆயினும் பவுலின் விசுவாசமோ தளர்ந்து போகவில்லை. ஏனென்றால் ஆபத்தான, துன்பமான எந்த ஒரு சூழ்நிலையிலும் கர்த்தராகிய இயேசு தன்னோடு நீங்காதவராகவே இருப்பார் என்பதே அவனுடைய விசுவாசம்.

– உங்கள் அன்பு சகோதரி



September '15

"I Have Decided to Follow Jesus"

"I Have Decided to Follow Jesus" is a Christian hymn originating from India.

The lyrics are based on the last words of a man in Garo, Assam, north-east India. About 150 years ago, there was a great revival in Wales, England. As a result of this, many missionaries came from England and Germany to North-East India to spread the Gospel.

At the time, north-east India was not divided into many states as it is today. The region was known as Assam and comprised hundreds of tribes. The tribal communities were quite primitive and aggressive by nature. The tribals were also called head-hunters because of a social custom which required the male members of the community to collect as many heads as possible.

A man's strength and ability to protect his wife was assessed by the number of heads he had collected. Therefore, a youth of marriageable age would try and collect as many heads as possible and hang them on the walls of his house. The more heads a man had, the more eligible he was considered.

Into this hostile and aggressive community, came a group of Welsh missionaries spreading the message of love, peace and hope of Jesus Christ. Naturally, they were not welcomed. One Welsh missionary shared gospel & a man, his wife, and two children believed in Jesus.

This man's faith proved contagious and many villagers began to accept Christ. Angry, the village chief summoned all the villagers.

He then called the family who had first converted to renounce their faith in public or face execution. Moved by the Holy Spirit, the man instantly composed a song which became famous down the years.

He sang:

"I have decided to follow Jesus. (3 times)
No turning back, no turning back."

Enraged at the refusal of the man, the chief ordered his archers to arrow down the two children. As both boys lay twitching on the floor, the chief asked, “Will you deny your faith? You have lost both your children. You will lose your wife too.”

But the man sang these words in reply:

"Though no one joins me, still I will follow. (3 times)
No turning back, no turning back."

The chief was beside himself with fury and ordered his wife to be arrowed down. In a moment she joined her two children in death.

Now he asked for the last time, “I will give you one more opportunity to deny your faith and live.”

In the face of death the man sang the final memorable lines:

"The cross before me, the world behind me. (3 times)
No turning back, no turning back."

He was shot dead like the rest of his family. But with their deaths, a miracle took place. The chief who had ordered the killings was moved by the faith of the man. He wondered, “Why should this man, his wife and two children die for a Man who lived in a far-away land on another continent some 2,000 years ago?

There must be some remarkable power behind the family's faith, and I too want to taste that faith.” In a spontaneous confession of faith, he declared, “I too belong to Jesus Christ!”

When the crowd heard this from the mouth of their chief, the whole village accepted Christ as their Lord and Savior.

-The Choir's Pen

# BIRTHDAYS IN THE MONTH OF SEPTEMBER

| | | | |
|---|---|---|---|
| September 1 | Mr. N.Paul | September 17 | Baby Eunice Giftlin |
| | Mr.M. Amarnath | September 18 | Baby Alwin Sam |
| September 4 | Master. P. Caleb Derrick Samuel | September 19 | Mrs. Susheela Barnabas |
| | Mrs. M. Dhanalakshmi | | Mr. Nova Manuel Raj |
| | Mr. Vasudeva Rao | | Mrs. P. Padmavathy Panchanathan |
| September 5 | Mr. P. Christy | September 20 | Mrs. Rajasundari Jebaraj |
| September 7 | Mrs. Dorothy Jayaraj | | Mrs. D. Gunaseei |
| September 8 | Mr. J.Radha Krishnan | September 21 | K.Emerson |
| September 9 | Mr. M. Ramesh Andrews | September 22 | Mr.A. Aaron John Wesley |
| | Mrs. S. Sushila | September 23 | Mr.A. Godwin |
| September 10 | Mr. D. Joseph Charles Premkumar | September 26 | Mr. R. Solomon Giftson |
| September 11 | Miss. R. Sharmila | | R.Carolyne Joanna |
| | Mrs. E. B. Anbazhagan | September 27 | Mr. V. Justin Thanga Prakash |
| September 12 | Mr. M. T. Richard Thomas | | J. Leah Veronica |
| | Mrs. Preety Manoj | | A.Ron Daniel |
| September 13 | R.Shantha Kumari | September 28 | A.Gnanaraj |
| September 14 | Miss. R. Chrysolite Sheffrina | | A.Alwin |
| | Mr. D. Hubert | | Mr. E. K. Raj Kumar |
| September 15 | Mr. A. Jayakumar | September 29 | Mr.C. Sam Sundar |
| | Mr. C. Paul Ashoke | | R.Nirubha |
| September 16 | Mr. I. P. Yesudas | September 30 | Miss. J. Jency Magdalene |

# WEDDING DAYS IN SEPTEMBER

| | |
|---|---|
| September 3 | Mr. J.Reuben Edward & Mrs. S. Tabitha Salome |
| September 6 | Mr. T.Selvaraj & Mrs. A. Charlet |
| September 9 | Mr. D.Joseph Charles Premkumar & Mrs. Jaya Kala Mercy Joseph |
| September 11 | Mr. C. Ravi Joshua Daniel & Mrs. J. Linda Joy Grace |
| September 14 | Mr.P. Christy Douglas & Mrs. Shantha Douglas |
| September 15 | Mr. G. K. David & Mrs. Christy Beaula |
| September 15 | Mr. N. Paul & Mrs. P. Punnuthai |
| September 16 | Mr. S. Karthik & Mrs. Monica |
| September 26 | Mr. R.Vinu Raja & Mrs. R.Gayathri |



**பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கொண்டாடும்**
**அனைவருக்கும் திருச்சபையின் சார்பில்**
**வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!**



# Important Days in September




September 1st Week: National Nutrition Week-India

September 2: World Coconut day

September 5 : Teachers' Day (Dr. Radhakrishnan's Birthday)

September 5 : Forgiveness day



September 8 :World Literacy Day.

September 13: World Chocolate Day

September 14 : Hindi day, World first aid day

September 16 :World Ozone Day.

Engineer's day in India




September 21 :Alzheimer's Day,

International day of peace




September 24: World Maritime Day

September 25 : Social justice day




September 26 : Day of the Deaf.

September 27 : World Tourism Day.

September 28: World Rabies Day

September 29: World Heart Day

September 30: International Translation Day








World Rabies Day



# வேத வினா - விடை போட்டி

## செப்டம்பர் மாத கேள்விகள்
## யோவானின் நிருபங்கள் (வசன ஆதாரம் தரவும்)

1. யோவான் தனது 3வது நிருபத்தை யாருக்காக எழுதினார்?
2. யார் தேவனைக் காணவில்லை?
3. "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று எங்கு நாம் வாசிக்கிறோம் ?
4. யார் அன்பிலே பூரணப்படுவதில்லை?
5. பிதாவினிடத்தில் நமக்காக பரிந்து பேசுகிறவர் யார்?
6. தேவ அன்பு யாரிடத்தில் மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்?
7. யாரை நம் வீட்டிற்குள் வர அனுமதிக்கக்கூடாது?
8. உலகத்தில் இருக்கிறவனைவிட பெரியவர் யார்?
9. பூலோகத்தில் சாட்சியிடுகிறவைகள் மூன்று - அவைகள் யாவை?
10. வேண்டாம் என்று சொன்னதை வேண்டும் என்று கேட்கவே
    கிடைத்தது பணம் சாக்கிலே மாறியது
    நிறம் சதையிலே அவன் யார் ? (பழைய ஏற்பாடு).

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 01-10-2015**

<u>விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி</u>

**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**
எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை – 600 099.

குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்

csinewlifeinjesus@gmail.com 9444 633129

**www.csinewlifeinjesus.org**

**பாராட்டுகிறோம்!**

16.09.2015 அன்று திருமண வாழ்வில் புதிதாய் இணைக்கப்பட்ட
செல்வன் **கார்த்திக்** - செல்வி **மோனிகா**
அவர்களை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.



# <u>சென்ற மாத போட்டியின் விடைகள்</u>

| | | |
|---|---|---|
| 1. | இரத்த நிலம் | அப் 1:19 |
| 2. | ஜீவாதிபதி / நசரேயன் | அப் 3:15/4:10 |
| 3. | கலிலேயா | அப் 2:7 |
| 4. | சூரியன்– இருள், சந்திரன் – இரத்தம் | அப் 2: 20 – 21 |
| 5. | அப் 2: 36 – 39 | |
| 6. | எருசலேம் சாலொமோன் மண்டபம் | அப் 5: 12 |
| 7. | இரண்டு / மீதியான் | அப் 7:29 |
| 8. | எண்ணாகமம் 3: 39 – 50 | |
| 9. | பேதுரு கொர்நேலியுவிடம் | அப் 10:25, 26 |
| 10. | தொற்காள் என்னும் தபீத்தாள் | அப் 9:36– 39 |

## பத்து கேள்விகளுக்கும் சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
2. திருமதி. கீதா ஹென்றி
3. திருமதி. ஜாய்ஸ் விமலா
4. திருமதி. தேவ ரோசலின்
5. திருமதி. கலா சுந்தரகுமார்

**அறுப்பின் ஸ்தோத்திர பண்டிகைக்காக ஜெபித்த, கொடுத்த பங்கு பெற்ற அனைவருக்கும் நன்றி**

**வருந்துகிறோம்!**

நமது சபையின் உறுப்பினர்
திரு **P.சற்குணம்** அவர்கள்
கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள்.
அவர்கள் குடும்பத்தாருக்கு கர்த்தர் தாமே
ஆறுதல் அளிப்பாராக

சிறப்புக் கட்டுரை

# தென்னிந்திய திருச்சபை உருவான வரலாறு.

திருச்சபை வரலாற்றில் இரண்டாம் பெந்தேகோஸ்தே என்று அழைக்கப்படும் நிகழ்வு யாதெனில் 1947 ஆம் ஆண்டு செப்டம்பர் 27ம் நாள் சென்னையில் உள்ள தூய ஜார்ஜ் பேராலயத்தில் நிறுவப்பட்ட தென்னிந்திய திருச்சபையாகும்.

இவை உடனே நிறைவேறவில்லை ஆங்கிலிக்கன், மெத்தடிஸ்ட் சபைராளுகை மற்றும் மூப்பராளுகை சபைகள் இவ்வாறு இணைந்து தென்னிந்திய திருச்சபையாக உருவானதற்கு பின்னணியில் பல தொடர் முயற்சிகள், விவாதங்கள், தர்க்கங்கள், விட்டுக்கொடுப்புகள் போன்றவை காணப்பட்டன.

1850ல் முதன் முதலாக இந்தியாவிலுள்ள அனைத்துச்சபைகளிலும் ஒன்றினைந்து ஒரே இறைவனின் திருப்பனியைச் செய்ய வேண்டும் என்று நற்செய்தி பணி சங்கங்கள் (Missionary Movements) சிந்திக்க தொடங்கின.

இச்சிந்தனையை 1855 கல்கத்தா , 1857 பெனாரஸ், 1858 உதகமண்டலம், 1862 லாகூர்,1872 அலகாபாத் 1879 சென்னை ஆகிய இடங்களில் நற்செய்தி பணி சங்கங்கள் தங்களின் மாமன்ற கூடுகையில் முன் வைத்து விவாதித்தனர். 1988ல் லண்டன் மாநகரில் நடைபெற்ற நற்செய்தி இயக்கங்களின் நூற்றாண்டு மாமன்ற கூடுகையில் பிறசபைகளை புரிந்து கொள்ளுதலும் ஒத்துழைப்பும் மற்றும் இந்தியாவில் கிறிஸ்துவின் சபை போன்ற கட்டுரைகள் வெளியிடப்பட்டு சிந்திக்கப்பட்டன.

இந்தியாவின் அரசியல் விடுதலை வேட்கையுணர்வில் இந்திய திருச்சபை தன்னையும் இணைத்துக் கொண்டதால் ஆன்மீக வாழ்விலும் விடுதலை உணர்வுடனான ஒற்றுமை நிலவ வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது.

திருச்சபைகளின் ஒருங்கினைப்புடனான ஒரே இலக்கை நோக்கிய முன்னேற்றம் கானப்பட்டது. CLS, IMS, NMS, YMCA போன்ற அமைப்புகளின் வரவாலும் முயற்சியாலும் சபைகளின் ஒற்றுமை பற்றிய முயற்சிகள் தொடரப்பட்டன. மதிற்பிற்குரிய பேராயர். வி.எஸ்.அசரியா, கே.டி.பால், சி.ஜே.லூகாஸ், ஜே. சாண்டியகோ மற்றும் ஏ.ஜே.அப்பாசாமி போன்ற ஆன்மிக தலைவர்களின் முயற்சியாலும் MCC, WCC, UTC, Jaffna College போன்ற திருச்சபை நிறுவனங்களின் கூட்டு முயற்சியாலும் உழைப்பாலும் சபை ஐக்கிய முயற்சிகள் வலுப்பெற்றன. 1900 ஆம் எடின்பர்க் மாமன்ற கூடுகையில் ஒன்றிணைந்த ஒரே திருச்சபை என்ற கருத்து அதிகமாக பேசப்பட்டது. முதன் முதலில் 1901 ஆம் ஆண்டு ஆற்காடு மிஷன் மற்றும் ஸ்காட்லாந்து திருச்சபை மிஷன் ஆகிய இரண்டு மூப்பராளுகை சபைகள் ஒன்றினைந்தன. 1904-ல் சபையராளுகை பாரம்பரியத்தை சேர்ந்த மதுரை, யாழ்பான சபைகளும் திருவிதாங்கூர் திருச்சபைகளும் ஒன்றிணைந்தன.



1908 சபையராளுகை மற்றும் மூப்பராளுகை சபைகள் ஒன்றிணைந்து தென்னிந்திய ஐக்கிய சபை உருவானது பேராயர் HENRY WHITE HEAD போன்ற தலைவர்கள் தம் அருள் உரைகளிலும், பேச்சுகளிலும் ஆங்கிலிக்கன் சபைகள் தென்னிந்திய ஐக்கிய சபை உடன் இணையும் முயற்சிகளை வலியுறுத்தினர் பல ஆண்டு இடைவெளிக்கு பிறகு 1919 தரங்கம்பாடியில் சபை ஐக்கியம் பற்றிய ஒரே சிறப்பு முறை சாரா கூட்டத்தில் லூத்தரன், மெத்தடிஸ்ட், ஆங்கிலிக்கன் ஆகியவை தென்னிந்திய ஐக்கிய சபைகளுடன் பங்கு பெற்றன. கோட்பாடு மற்றும் பற்றுமை வேறுபாடுகளில் லூத்தரன் திருச்சபைகள் தொடர்ந்து பங்கு பெற முடியாமல் பின் வாங்கின. ஆனால் இந்தோ, பர்மா , சிலோன் ஆகிய திருச்சபையான ஆங்கிலிக்கன் சபையும் ஐக்கிய சபையும் இனைவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பேராயர். வி.எஸ்.அசரியா, அருட்திரு. வி. சாண்டியகோ அவர்கள் சீரிய முயற்சியாலும் தரங்கம்பாடி அறிக்கை வெளியிடப்பட்டது. அதன் விவாதங்கள் 1920, 1921, 1922, 1923, 1925 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றது.1925ல் மெத்தடிஸ்டுகள் ஒரு ஒப்புரவாகுதலுக்கு முன் வந்தன.தரங்கம்படி அறிக்கையின் கடைசி கூட்டம் 1941 ஆம் ஆண்டு நடைபெற்றது. **கர்த்தரின் பெரிதான கிருபையால் 1947ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ந் தேதி தென்னிந்திய திருச்சபை உருவானது.**

தென்னிந்திய ஐக்கிய சபையுடன் சென்னை, மதுரை மலபார் யாழ்பாணம் கன்னடா, தெலுங்கு மற்றும் திருவரங்கூர் மாமன்றங்களும் மெத்தடிஸ்டு திருச்சபையின் தென்னிந்திய பிராந்தியத்தின் சென்னை, திருச்சி, ஹைதராபாத், மைசூர் மாகாணங்களும், இந்தோனேசியா, பர்மா, சிலோன் சபையான ஆங்கிலிக்கன் பாரம்பரிய சபையின் சென்னை, டோர்னக்கல், திருநெல்வேலி, திருவிதாங்கோடு மற்றும் கொச்சின் திருச்சபைகள் ஒன்றாக இனைந்தன.

1947 ஆம் ஆண்டு முதல் ஆராதனை St.George Cathedral ஆலயத்தில் நடைபெற்றது.

பாடப்பட்ட முதல் பாட்டு

**“கர்த்தாவே யுகமயுகமாய்**
**எம்துனை ஆயினீர்”**

முதல் வேதபாட பகுதி

எபேசியர் 2: 20 - 22

First Speech Declaration:

**RT.REV.CK.JACOB**

Bishop Anglican diocese of Travancore & Cochin

தென்னிந்திய திருச்சபையானது 14 பேராயங்களோடு 10 லட்சம் மக்களோடும் ஆராம்பிக்கப்பட்டது. இன்று 22 பேராயங்களோடு 3.8 மில்லியன் உறுப்பினர்களை கொண்டுள்ளது. இதில் தமிழ்நாடு 8 , ஆந்திரா 6, கேரளா 4, கர்நாடக 3, இலங்கை 1.

**நான்கு கோட்பாடுகள்:**

1. பேராயர் ஆளுகை முறைமை.
2. திருமுழுக்கு, திருவிருந்து – சாக்கிரமெந்துகள்
3. அப்போஸ்தல, நிசேயா விசுவாச பிரமாணங்கள்.
4. புதிய மற்றும் பழைய ஏற்பாடு – முழு வேதாகமம்

**சின்னம்:**

1. சிலுவை
2. தாமரை
3. நெருப்பு

**1.சிலுவை:** ✚ 4 திருச்சபைகள் சம ஆளுகை
அனைவரும் சமம் (சாதி, இனம், நிறம், மொழி)

**2.தாமரை:** தேசிய மலரான தாமரைப்போல இந்திய கலாச்சாரத்தில் ஊன்றி வளர வேண்டும். சேற்றுக்குள் பூக்கின்ற செந்தாமரை போல பாவமான உலகில் தூய வாழ் விற்கு முன் மாதிரியாக மிளிர்கின்ற சபையாக தென்னிந்திய திருச்சபை வளர வேண்டும்

தாமரை தண்ணீரில் இருந்தாலும் நீர் ஒட்டாதது போல திருச்சபையும் சமுதாய தீமைகளில் கறைப்படாமல் அதே நேரம் அலைகளை எதிர்த்து போராடும் சபையாக விளங்க வேண்டும்.

**3.நெருப்பு இதழ்கள்** : தூய ஆவியானவரின் செயல்பாட்டை சித்தரிக்கிறது.

**நோக்கம்:**

**அவர்கள் எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக**
யோவான் 17: 21

**- A.Joseph** M.Sc.,M.A.,BBA.,DMLT.,
Lay Preacher / Lay Leader



# WHY MISS MATCHES IN OUR LIFE?

**ஆகாய் :1:6**

| | | |
|---|---|---|
| **திரளாய் விதைத்தல்** | - | **கொஞ்சமாய் அறுப்பு** |
| **புசித்தாலும்** | - | **திருப்தியாகவில்லை** |
| **குடித்தாலும்** | - | **பரிபூரணப்படவில்லை** |
| **வஸ்திரம் உடுத்தியும்** | - | **குளிர் காயவில்லை** |
| **சம்பாதித்தாலும்** | - | **பொத்தல் பையில் போடுகிறவனாய் சம்பாதித்தல்** |

ஆகாய் 1: 9 தேவன் ஊதிப் போடுகிறார் என்று வாசிக்கின்றோம்

ஆகாய் 10: 11 . தேவன் வறட்சியை வருவிக்கிறார் என்று வாசிக்கின்றோம் ஏன்? தேவனுடைய வீடு பாழாய் கிடக்கிறது. அது தான் காரணம் என தீர்க்கன் கூறுகிறார்.

ஆலய காரியங்களில் நமக்குள்ள பங்களிப்புகள் குறைவதையே இங்கு சுட்டி காட்டப்படுகிறது. தேவனின் வீடாகிய நமது உள்ளங்களில் பரிசுத்தம், உபவாசம், போராடி ஜெபித்தல் வேததியானம் போன்றவை குறைவுபட்டு பாழாய் கிடந்து கொண்டிருக்கிறது.

இன்று உங்களை பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள். நாளை உங்கள் நடுவில் அற்புதம் நடக்கும். எனும் வாக்கியத்தின் படி நமது Miss Matches Correct Match ஆக தேவன் சூழ்நிலைகளை மாற்றித் தருவார். ஆம் பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனை தரிசிப்பதில்லையே!

அநேக நேரங்களில் நாம் தேவனுக்கேற்றபடி பரிசுத்தமாய் இருந்தாலும் சில நன்மைகள் உடனடியாக கிடைத்து விடுவதில்லை. அப்போது சோர்ந்து போய்விடக் கூடாது. யாக்கோபு 20 வருடம் தன் வாழ்க்கையில் சோர்விற்றிருந்தான். 14 வருடம் தன் வாழ்க்கையில் 2 குமாரத்திகளுக்காவும், 6 வருடம் மந்தைகளுக்காவும் காத்திருந்தான். 10 முறைகள் சம்பளம் மாற்றப்பட்டது. ஆனாலும் அவன் தேவனையே சார்ந்திருந்தான். கர்த்தர் ஏற்ற நேரத்தில் அவனை உயர்த்தினார். ஆசீர்வாதமான சந்ததி உருவாயிற்று.

நாமும் நம் சூழ்நிலைகள் மோசமாகி கொண்டிருக்கிறதே என நம்மை நாமே குறைவுபடுத்திக் கொள்ளக்கூடாது. "**ஏற்ற காலத்தில் கர்த்தர் உங்களை உயர்த்தும்படி அவருடைய பலத்த கரத்தில் அடங்கி**" இருந்தோமானால் யாக்கோபின் சந்ததியைப்போல நமது சந்ததியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். தேவன் உண்மையுள்ளவர். அவர் வாக்கு மாறாதவர். ஜெபித்து பரிசுத்தமாவோம்.

இப்படிக்கு
கிறிஸ்துவின் ஊழியத்தில்
**G.G. ஜெபராணி**